முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சங்கரமகரிஷி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.03.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **அருள் வடிவாக நின்று காத்து**
   **அறம்வழி ஆளுமை புரிகின்ற**
   **அருள்மிக்க ஆறுமுக அரங்கனே**
   **அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசி
   குறையிலா **விளம்பி சேல் திங்கள்**
   **தெரியவே தசதிகதி கதிர் வாரம்**
   **(விளம்பி வருடம் பங்குனி மாதம் 10ம் நாள் 24.03.2019, ஞாயிற்றுக்கிழமை)**
   **தேசிகனுக்கு சங்கரமகரிஷி யானும்**
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வாக அரங்கன் காட்டும்
   ஞான வழிகளை ஏற்று
   ஞாலமதில் சரணடைவு கொண்டு
4. கொண்டுமே அரங்கா என வேண்டி
   குவலயம் எங்கும் மக்கள்
   தொண்டென அரங்கன் புகழை
   தொடர்ந்து பரப்பி வருதலுற
5. வருவதுடன் பசிபிணி விரட்டி
   வறுமை கட்டம் போக்கும்
   தருமமாம் அன்னதானமதை
   தரணியில் செய்து வருதல் காண
6. காணவே அரங்க மகானும்
   கலியுகத்தில் வந்த நோக்கமும்
   ஞானபண்டிதன் வரவும் புகழும்
   நல்லோர்கள் காப்புக்காண சேவையும்
7. சேவையும் வளரும் விரிவடையும்
   செந்தில் வேலன் வழிபாடு பெருகும்
   அவணியிலே எதிர்மறை பலன்கள்
   அனைத்தும் விலகி நன்மை கூடும்
8. கூடவே தொண்டர் படையென
   குருவரங்கன் உபதேசம் வழி
   திடமாக இறங்கி கலியுகத்தில்
   தெய்வீக ஆட்சி அமையும் வண்ணம்
9. வண்ணமுடன் களப்பணியாக
   வருமுலகில் அரசியல் தொடர்பை
   எண்ணமெல்லாம் கொண்டு நன்கு
   ஏழாம் படை வீட்டின் சக்தியோடு

10. சக்தியோடு இணைந்து வருக
சகல தடமும் ஞானவான்கள்
பக்திபட அரங்கன் அருள்பட
பாடிடுவேன் உலகோர் இணைந்து

11. இணைந்து சேவை ஆற்றிட
எல்லா மக்களுக்கும் துணிந்துவர
இணையிலா ஞான ஆட்சி
இனி அரங்கன் தருமத்தால் அமையும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–